தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre, Homebush Inc.
Postal Address: P O Box 4032, Homebush NSW 2140
www.tsch.org.au homebushtsch@gmail.com

அரையாண்டுப் பரீட்சை 2026

ஆண்டு: 9 **திகதி**: 13.06.2026

நேரம்: 2:00 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள்

ஆசிரியர்: திரு. ச. தேவராசா

மாணவர் பெயர்:_____

வினாக்கள்	வினா புள்ளி	பெற்ற புள்ளி
வினா 1	10	
வினா 2	10	
வினா 3	20	
வினா 4	20	
வினா 5	20	
வினா 6	20	
மொத்தப் புள்ளிகள்	100	

வினா இல	1	புள்ளிகள்	10	பக்கம்	2

1. கேட்டுக்கிரகித்தல்.

1. அந்தக் கிராமம் இயற்கை அழகு மிக்கது என்பதற்கு இரண்டு காரணங்கள் எழுதுக. (2 புள்ளிகள்)

_____

_____

_____

2. கூறப்பட்ட குடும்பத்தின் உறுப்பினர்கள் யாவர்? (2 புள்ளிகள்)

_____

3. ஐந்து ஆண்பிள்ளைகளும் ஆரம்பத்தில் எப்படி வாழ்ந்தார்கள்? அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட பிரச்சனை என்ன? (2 புள்ளிகள்)

_____

_____

_____

_____

4. ஒற்றுமையே பலம் என்பதற்கு விவசாயி எதை உதாரணமாகக் காட்டினார்? (2 புள்ளிகள்)

_____

_____

_____

_____

5. கதையின் கூறப்பட்ட பழமொழி யாது? (2 புள்ளிகள்)

_____

_____

வினா இல	2	புள்ளிகள்	10	பக்கம்	3

2. பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஆறு சொற்களுக்குக் குறையாமல் வாக்கியங்கள் எழுதுக.

1. வணக்கம் :_____

_____

2. தமிழ் மொழி :_____

_____

3. நட்சத்திரங்கள் :_____

_____

4. மிருகங்கள் :_____

_____

5. ஆசிரியர்கள் :_____

_____

6. பாடினேன் :_____

_____

7. ஓடுகின்றது :_____

_____

8. **கூவும்** :_____

_____

9. **சிரித்தனர்** :_____

_____

10. **வருவார்கள்** :_____

_____

வினா இல	3	**புள்ளிகள்**	20	**பக்கம்**	4

3. **பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

பாரதியார் தமிழ்நாட்டிலுள்ள எட்டயபுரம் என்ற ஊரில் பிறந்தார். இவருடைய இயற்பெயர் சுப்பிரமணியன். இவர் தமிழ், ஆங்கிலம், பிரஞ்சு ஆகிய மொழிகளைக் கற்றார். இளம் வயதிலேயே கவிதைகள் இயற்றுவதில் வல்லவராக இருந்தார். குயில்பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற பல கவிதைத் தொகுப்புகளை எழுதினார். அவர் இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் என்ற காப்பியத்தை எழுதியது போல பெரும் காப்பியத்தை எழுதவில்லை. வள்ளுவர் எழுதியது போல உலக மக்கள் எல்லாருக்கும் பொதுவான திருக்குறள் போன்ற நூலை எழுதவில்லை. கம்பர் எழுதிய கம்பராமாயணம் போன்ற நூலை எழுதவில்லை. திருக்க தேவர் எழுதிய சீவகசிந்தாமணி போன்ற காப்பியத்தையும் எழுதவில்லை. ஆனாலும் அவர் மகாகவி என்று அழைக்கப்பட்டார். அதற்கு என்ன காரணம்? அகராதியினதும், ஆசிரியரதும் துணை இல்லாமல் இலகுவில் விளங்கிக்கொள்ள முடியாதவைகளாக தமிழ்க் கவிதைகள் இருந்தன, அந்த நிலையை மாற்றி சாதாரண மக்களும் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் கவிதை எழுதும் வழக்கத்தை ஆரம்பித்து வைத்தார். அவருக்குப் பின் வந்த கவிஞர்கள் அவருடைய வழியைப் பின்பற்றி, சாதாரண சொற்களைப் பயன்படுத்திச் சிறந்த கவிதைகளை எழுதினார். பாரதிதாசன், கவிமணி

தேசிக விநாயகம்பிள்ளை, கவிஞர் மருதகாசி, கவிஞர் கண்ணதாசன், கவிஞர் வைரமுத்து போன்றவர்களை, பாரதியாரின் கவிதைப் பரம்பரையில் வந்தவர்களுக்கு உதாரணமாகக் கூறலாம். மகாகவி பாரதியார் தனது 39 ஆவது வயதில் இறந்தாலும் அவர் இயற்றிய கவிதைகளில் இன்றும் வாழ்கிறார்.

1. பாரதியார் எங்கே பிறந்தார்? (2 புள்ளிகள்)

_____

_____

2. பாரதியார் கற்றுணர்ந்த மொழிகள் எவை? (2 புள்ளிகள்)

_____

_____

3. எழுதியவர் – நூல்கள்:

எழுதியவர்	நூல்கள்
இளங்கோவடிகள்	
வள்ளுவர்	
கம்பர்	
திருத்தக்க தேவர்	
பாரதியார்	

(10 புள்ளிகள்)

4. பாரதியார் மகாகவி என்று அழைக்கப்பட்டதன் காரணம் என்ன?

(6 புள்ளிகள்)

வினா இல	**4**	**புள்ளிகள்**	**20**	**பக்கம்**	**6**

4. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

இலக்கியம் என்றால் என்ன? என்ற வினாவுக்கு இலக்கியம் என்று சொல்லை இலக்கு + இயம் என்று பிரித்துப்பார்த்து இலக்கை இயம்புவது, அதாவது ஒரு குறிக்கோளாக கூறுவது என்றும், காலத்தின் கண்ணாடி இலக்கியம், அதாவது ஒரு கால இலக்கியம் அந்த மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாக இருக்கும் என்றும் கூறுவார்கள். உதாரணமாக மக்களை நல்வழியில் வாழ வைக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் எழுதப்பட்டது திருக்குறள். சங்க காலத்தில் தோன்றிய அகநானூறு, புறநானூறு போன்ற இலக்கியங்கள் அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையை அப்படியே காலத்தின் கண்ணாடிகளாகக் காட்டுகின்றன.

தமிழ் இலக்கியங்கள் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் என நான்கு வகைப்படும். நீண்ட காலமாக கவிதை இலக்கியம் மட்டும் தமிழில்

இருந்தது. ஐரோப்பியர் வருகையின் பின்னே சிறுகதை இலக்கியம், நாவல் இலக்கியம், நாடக இலக்கியம் என்பனவும் தமிழில் தோன்றின. ஐரோப்பியர் வருவதற்கு முன்பு, தமிழ்ப் புலவர்கள் இலக்கியங்களைப் பனையோலையில் எழுதினார்கள். ஐரோப்பியர் காகிதத்தையும் அச்சியந்திரத்தையும் அறிமுகப்படுத்தினார்கள். அதன் பின்பு, ஓலைச்சுவடிகளில் இருந்த தமிழ் இலக்கியங்கள், புத்தகங்களாக வெளிவந்தன. கணினியின் பயன்பாடு வந்த பின்பு கணினியில் தமிழ் இலக்கியங்கள் பதிக்கப்பட்டன. இவ்வாறு காவோலை, காகிதம், கணினி என்று காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப, தமிழ் இலக்கியங்கள் பலவற்றில் எழுதப்பட்டு வளர்ச்சியடைந்து வருகிறது.

1. இலக்கியம் என்றால் என்ன? (5 புள்ளிகள்)

_____

_____

2. திருக்குறள் குறிக்கோளைக் கூறுது என்று கூறப்படுவதன் காரணம் என்ன? (5 புள்ளிகள்)

_____

_____

_____

_____

3. தமிழ் இலக்கியத்தின் நான்கு வகைகளும் எவை? அவற்றில் ஐரோப்பியர் வருகையின் பின்பு உருவான இலக்கியங்கள் எவை? (5 புள்ளிகள்)

_____

_____

_____

_____

_____

4. ஐரோப்பியர் வருகையின் காரணமாக தமிழ் இலக்கியங்களுக்கு ஏற்பட்ட நன்மைகளை எழுது. (5 புள்ளிகள்)

வினா இல	5	புள்ளிகள்	20	பக்கம்	8

5. நீங்கள் வாழ்கின்ற ஊரில் பல்வேறு வசதிகளுடன் கூடிய நூலகம் ஒன்றை அமைத்துத் தருமாறு, 100 சொற்களுக்குக் குறையாமல், உங்களின் நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஒரு கடிதம் எழுதுக.

வினா இல	6	புள்ளிகள்	20	பக்கம்	10

6. பின்வருவனவற்றில் ஒன்றைப் பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.

1. நான் கண்ட பயங்கரமான கனவு
2. எனது வெளிநாட்டுப் பிரயாண அனுபவங்கள்
3. அன்னையர் தினம்